வகுப்பு : 11

தேர்வு எண்

| | | | | | |
|---|---|---|---|---|---|

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2024

நேரம் : 1.30 மணி]

## கணினி அறிவியல்

[மொத்த மதிப்பெண்கள் : 50

### பகுதி – I

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10X1=10

1. இவற்றுள் எது வரையெல்லை செயற்குறியாகும்?
   அ) & ஆ) > இ) % ஈ) ::
2. நிரலின் செயலாக்கம் எந்த செயற்கூறிலிருந்து தொடங்கும்?
   அ) isalpha () ஆ) isdigit() இ) main () ஈ) islower ()
3. add (int, int) ; என்ற செயற்கூறின் முன்வடிவின் திருப்பி அனுப்பும் தரவினத்தின் வகை யாது?
   அ) int ஆ) float இ) char ஈ) double
4. int age[]={6,90,20,18,2,7} இந்த அணியில் எத்தனை உறுப்புகள் உள்ளன?
   அ) 2 ஆ) 5 இ) 6 ஈ) 4
5. சரங்கள் தானமைவாக இவற்றுள் எந்த குறியுருவுடன் முடிவடையும்?
   அ) \0 ஆ) \t இ) \n ஈ) \b
6. கட்டுரு உறுப்புகளை அணுகும் போது புள்ளி செயற்குறியின் இடது புறமுள்ள குறிப்பெயரின் பெயர்
   அ) கட்டுறு மாறி ஆ) கட்டுறு பெயர் இ) கட்டுறு உறுப்பு ஈ) கட்டுறு செயற்கூறு
7. பின்வருவனவற்றுள் எது பயனர் வரையறுக்கும் தரவு வகை?
   அ) இனக் குழு ஆ) மிதவை இ) முழு எண் ஈ) பொருள்
8. தரவை நிரலின் நேரடி அணுகு முறையிலிருந்து பாதுகாப்பது
   அ) தரவு மறைப்பு ஆ) உறைபொதியாக்கம் இ) பல்லுருவாக்கம் ஈ) அருவமாக்கம்
9. பின்வருவனவற்றுள் எது மரபுரிமத்தின் முக்கியமான பண்பாகும்?
   அ) தரவு மறைப்பு ஆ) உறைபொதியாக்கம் இ) குறிமுறை மாற்றம் ஈ) அணுகுமுறை
10. கட்டுரு வரையறை எந்த செயற்குறி முடிவடைதல் வேண்டும்?
   அ) : ஆ) } இ) ; ஈ) ::

### பகுதி – II

II. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 17க்கு கட்டாயம் விடையளி. 5x2=10

11. void தரவு வகையின் முக்கியத்துவங்கள் என்ன?
12. உள்ளமை வரையெல்லை பற்றி சிறுகுறிப்பு வரைக.
13. இருபரிமாண அணியை அறிவிக்கும் தொடரியலை எழுதுக.
14. வரையறு : கட்டுரு, அதன் பயன் என்ன?
15. பொருள் நோக்கு நிரலாக்கத்தின் குறைபாடுகள் யாவை?
16. பல்லுருவாக்கம் என்றால் என்ன?
17. கீழ்க்கண்ட நிரலின் வெளியீட்டை எழுதுக.

```
#include using namespace std;
int main()
{
   int num[5] = {10, 20, 30, 40, 50};
   int t=2;
cout<<num[0]<<endl;
cout<<num[3+1]<<endl;
cout<<num[t=t+1];
}
```

### பகுதி – III

III. ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். 24 க்கு கட்டாயம் விடையளி. 5x3=15

18. strcmp ( ) செயற்கூறு பற்றி குறிப்பு வரைக.
19. முன்னிலைப்பு செயலுருபுக்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

20. சரங்களின் அணியைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
21. பெயரற்ற கட்டுரு என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
22. தகவல் மறைப்பு – வரையறு.
23. isupper ( ) மற்றும் toupper ( ) செயற்கூறுகளின் வேறுபாடுகள் யாவை?
24. கட்டக நிரலாக்கத்தின் சில அம்சங்களைப் பற்றி குறிப்பு வரைக.

## பகுதி – IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3x5=15**

25. அ) மதிப்பு மூலம் அழைத்தல் முறையை தகுந்த எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**(அல்லது)**

ஆ) மாறியின் வரையெல்லை விதிமுறைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

26. அ) பொருள் நோக்கு நிரலாக்கம் மற்றும் நடைமுறை நிரலாக்கம் – வேறுபடுத்துக.

**(அல்லது)**

ஆ) பொருள் நோக்கு நிரலாக்கத்தின் நன்மைகள் யாவை?

27. அ) பொருள் நோக்கு நிரலாக்கத்தை ஆதரிக்கும் அடிப்படைக் கருத்துகளைப் பற்றி குறிப்பு வரைக.

**(அல்லது)**

ஆ) **பின்வரும் C++ நிரலின் வெளியீட்டை எழுதுக.**

```
#include<iostream>
#include<stdio>
#include <string>
#include<conio>
using namespace std;
struct books {
char name[20], author[20];
} a[50];
int main()
{
clrscr();
cout<< "Details of Book No " << 1 << "\n";
cout<< "---------------------- \n";
cout<< "Book Name :"<<strcpy(a[0].name,"Programming ")<<endl;
cout<< "Book Author :"<<strcpy(a[0].author,"Dromy")<<endl;
cout<< "\nDetails of Book No " << 2 << "\n";
cout<< "------------------------- \n";
cout<< "Book Name :"<<strcpy(a[1].name,"C++programming" )<<endl;
cout<< "Book Author :"<<strcpy(a[1].author,"BjarneStroustrup ")<<endl;
cout<<"\n\n";
cout<< "================================================\n";
cout<< " S.No\t| Book Name\t|author\n";
cout<< "====================================================";
for (int i = 0; i < 2; i++) {
cout<< "\n " << i + 1 << "\t|" << a[i].name << "\t| " << a[i].author;
}
cout<< "\n================================================";
return 0;
}
```



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com